பேரவையில் மைக் ‘ஆப்’ செய்யப்பட்டதாக ஆளுநர் கூறியது அப்பட்டமான பொய்!

திட்டமிட்டே அரசின் உரையை வாசிக்காமல் பேரவையிலிருந்து வெளியேறியிருக்கிறார் ஆளுநர்!

ஆளுநர், பா.ஜ.க.வின் பிரதிநிதியாக சட்டமன்றத்திற்கு வந்து சென்றுள்ளார்!

சட்டப்பேரவை வளாக பேட்டியில் – அமைச்சர் எஸ்.ரகுபதி கடும் கண்டனம்!

சென்னை, ஜன.22–

இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (20.01.2026) சட்டப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :–

ஒன்றிய அரசின் பிரதிநிதியாக இருக்கவேண்டிய ஆளுநர், இன்றைய தினம் பாரதிய ஜனதா கட்சியின் பிரதிநிதியாக நம்முடைய சட்டமன்றத்திற்கு வந்து சென்றிருக்கிறார். சட்டமன்றத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக அவர்களிடத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிறோம். தமிழ்நாடு சட்டமன்றத்தின் மரபு, முதலில் தமிழ்த் தாய் வாழ்த்து பாடுவது - நிகழ்ச்சி முடிந்தவுடன் இறுதியிலே தேசிய கீதம் பாடுவது - இது தமிழ்நாட்டின் மரபு என்பதை எடுத்துச் சொல்லி வந்து கொண்டிருந்தாலும் கூட அவர் அவர் இன்றைக்கு பேசத் துவங்கும்பொழுதே, தேசிய கீதம் பாடவில்லையே? என்று சொன்னார். அது மரபல்ல - நாங்கள் இன்றைக்கு உரையை நிகழ்த்த வேண்டும் என்று சொன்னதற்கு திரும்பத் திரும்ப அவர் எழுதிக் கொடுக்கப்பட்ட அல்லது தயாரித்துத் தரப்பட்ட அல்லது தமிழக அரசால் கொடுக்கப்பட்ட அந்த ஆளுநர் அறிக்கையை வாசிக்காமல், தானாக ஏதாவது வார்த்தைகளை எல்லாம் சொல்லி, அதன் மூலமாக ஏதாவது இங்கே சட்டமன்றத்தில் பிரச்சினைகளைக் கிளப்ப முடியுமா? என்று பார்த்தார். ஆனால் எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

நம்முடைய சட்டப்பேரவைத் தலைவர், சட்டமன்றத்தில் ஆளுநர் அறிக்கையை படியுங்கள் என்ற வேண்டுகோளை, தயவு செய்து, எவ்வளவு தூரம் எளிமையாக தாழ்ந்து போய் கேட்கமுடியுமோ அந்த அளவுக்கு சபாநாயகர் கேட்டிருக்கின்றார். ஆனாலும், அவர் அப்படிக் கேட்டு, “நீங்கள் எழுதிக் கொடுத்த உரையை வாசியுங்கள்'' என்று சொல்லும்போது, அதை வாசிக்காமல் ஆளுநர் அவர்கள் வெளியேறி விட்டார்.

பேரவைத் தலைவரின் உரிமை!

வெளியேறிச் சென்ற பிறகு, தன்னுடைய ஆளுநர் மாளிகையில் இருந்து கொண்டு ஒரு அறிக்கையைத் தந்திருக்கின்றார். அவருடைய மைக் ஆஃப் செய்யப்பட்டது போல நாங்கள் அத்தனை பேரும் அங்குதான் இருக்கின்றோம் - பத்திரிகையாளர்களாகிய நீங்களும் மாடியில் இருந்து பார்த்துக் கொண்டு தான் இருந்தீர்கள். எந்த மைக் ஆஃப் செய்யப்பட்டது? அவர் பேசுகின்ற பொழுது, சட்டப்பேரவைத் தலைவர் எழுந்து நின்று, அவர் எழுதிக் கொடுத்திருக்கின்ற உரையை வாசியுங்கள் என்று நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை சுட்டிக்காட்டி, கேட்கின்ற உரிமை சட்டப்பேரவைத் தலைவருக்கு உண்டு - ஏனென்றால், சபையை நடத்துகின்றவர் அவர் - சபையினுடைய விருந்தினர், இன்றைக்கு சட்டமன்றத்தின் தலைவராக இருக்கக் கூடிய ஆளுநர் - அந்த உரையை வாசித்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும் - ஆனால், அதை விட்டுவிட்டு, திரும்பத் திரும்ப கேட்க கேட்க வேறு வேறு கேள்விகள் சொல்லிவிட்டு, இப்பொழுது “மைக்கை ஆஃப் செய்துவிட்டார்கள்” என்று சொல்கிறார். மைக் ஆஃப் செய்யப்படவில்லை - அது சுத்தமான புழுகு. அதை தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்காக இதன் மூலமாக தெரிவித்துக் கொள்கின்றோம் - ஆளுநர் ஏதோ தான் சொல்லிவிட்டால், அதை மக்கள் உண்மையாக எண்ணி விடுவார்கள் என்று நினைக்கின்றார். ஆளுநரின் மைக் அணைத்தப்படவில்லை - அணைக்கவேண்டிய அவசியம் எங்களுக்கில்லை - அவரைப் பேசத்தான் விட்டிருக்கிறோமே தவிர மைக்கை ஆஃப் செய்யவில்லை - ஆனால், அங்கிருந்து பல்வேறு பொய்யான குற்றச்சாட்டுகளை - இன்றைக்கு எதிர்க்கட்சிகள் சொல்லப்படாத குற்றச்சாட்டுகளை எல்லாம் வரிந்துகட்டிக்கொண்டு, எல்லோருக்கும் வக்காலத்து வாங்குகின்ற ஒரு வக்கீலாக இருந்து கொண்டு இந்த அரசுக்கு எதிராக என்னென்ன குற்றச்சாட்டுகள் சொல்ல முடியுமோ அதையெல்லாம் பொய்யாக இன்றைக்குச் சொல்லி இருக்கின்றார்.

தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது நம்முடைய முதலீடுகள் 12 லட்சம் கோடி ரூபாய் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்கிறோம் - அதோடு இல்லாமல், நாம் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் 4வது இடத்திலிருந்து 6வது இடத்திற்குப் போய்விட்டோம் என்று சொல்கிறார் - இந்திய ஒன்றியம் தன்னுடைய கணக்கில், 11.19 விழுக்காடு பொருளாதார வளர்ச்சியை கண்டிருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு என்று அறிவித்திருக்கிறது - நாங்கள் அறிவிக்கவில்லை - ஆனால், இவர் எதைப் பார்த்து சொல்கிறார் - எந்தக் கணக்கைப் பார்த்துக் கொண்டு சொல்கிறார் - இவர் தூங்கிக்கொண்டு பார்த்துச் சொல்கிறாரா? விழித்துக்கொண்டு சொல்கிறாரா? என்பது தெரியவில்லை. ஆனால், நாங்கள் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியை இரட்டை இலக்கத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம் என்று ஒன்றிய அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது - அதை யாராலும் மறைக்க முடியாது.

பொய் சொல்லி ஆளுநர்!

அதைப்போல, தொழில் வளர்ச்சியில் பல்வேறு மாநிலங்கள், பல்வேறு வெளிநாடுகள் இங்கு வந்திருக்கின்றன - பல தொழிற்சாலைகள் இன்றைக்கு உண்டாகி இருக்கின்றன - அதனால் தான் இந்த வளர்ச்சியை நம்மால் எட்ட முடிந்தது - தொழில் வளர்ச்சி இல்லை என்று சொன்னால் 11.19% பொருளாதார வளர்ச்சியை அடைவது என்பது சாத்தியமே கிடையாது - அதற்கு அடிப்படைக் காரணம் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு. எனவே இந்த வேலை வாய்ப்பு, தொழில் வளர்ச்சி பற்றிய ஆளுநர் சொல்லிய கருத்து முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை - ஒன்றிய அரசின் கணக்கெடுப்பு சரியானதாக 11.19% பொருளாதார வளர்ச்சி என்பது தமிழ்நாட்டின் வளர்ச்சி - அதை ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்தில் சொல்வதற்கு பதிலாக, ஆளுநர் மாளிகையில் இருந்து இன்றைக்கு பொய்யாக சொல்லி இருக்கின்றார்.

என்ன காரணம் - அது அவருக்குத் தான் தெரியும் - தமிழ்நாட்டின் மீது என்ன விரோதம் என்று அவருக்குத் தான் தெரியும் - 11.19 சதவிகிதம் பொருளாதார வளர்ச்சி எப்படி தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்பதை நீங்கள்தான் சென்று கேட்க வேண்டும் - இங்கு தொழிற்சாலைகள் வரவில்லை - வேலைவாய்ப்புகள் பெருகவில்லை என்று சொன்னால் எப்படி 11.19% பொருளாதார வளர்ச்சி தமிழ்நாட்டில் எட்டும் என்று ஆளுநர் அவர்களைப் பார்த்து நீங்கள் கேளுங்கள்.

கேள்வி: *ஆளுநர் வெளியே சென்ற 10 நிமிடத்தில் மூன்று பக்கத்திற்கு அறிக்கை வந்திருக்கிறது அப்போது அது முன்பே தயாரிக்கப்பட்டதா?*

பதில்: ஆமாம், முன்னாலேயே தயாரிக்கப்பட்டதுதான் ஆளுநர் இங்கிருந்து வெளியேறுகிறார், வெளியேறிய உடனேயே அந்த அறிக்கை ஆளுநர் மாளிகையில் இருந்து வருகிறது என்று சொன்னால், எல்லாம் திட்டமிடப்பட்ட வேலைகள் தான் - எனவே அவர்கள் முன்பே தயாரித்து வைத்திருக்கலாம் - எங்களுக்கு அதைப் பற்றி கவலையில்லை - தமிழ்நாட்டை குறை சொல்ல வேண்டும் - 2026 என்பது

தேர்தல் ஆண்டு - இதில் ஆட்சியைப் பற்றி ஏதாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அவர் ஏதாவது கனவு கண்டிருக்கிறார் - 11.19% பொருளாதார வளர்ச்சியை மூடி மறைக்க யாராலும் முடியாது - எந்த சக்தியாலும் முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேள்வி: *ஆளுநர் சென்றவுடன் முதலமைச்சர் அவர்களும் ஒரு அறிக்கையைப் படிக்கிறார்கள். அதுவும் முன்பே திட்டமிடப்பட்டதா?*

பதில்: அது நிச்சயமாக திட்டமிடப்பட்ட அறிக்கை இல்லை. அங்குதான் வாசிக்கிறார் - இதுபோன்ற சம்பவங்கள் நடந்தால், நாங்கள் எதிர்க்கட்சி ஆளுகின்ற மாநிலங்களில், இந்த நடைமுறை இருக்கிறது -ஆளுநர் இங்கு எழுதிக் கொடுத்த உரையை வாசிப்பது இல்லை என்று சொல்லிவிட்டால், எதற்கு ஆளுநர் உரையோடு தொடங்க வேண்டும் - அதற்கு ஒன்றிய அரசில், நாங்கள் நாடாளுமன்றத்தில் அதற்கான அரசியல் சாசன சட்டத் திருத்தத்தை தான் கொண்டு வருவோம் என்று சொல்கிறோமே தவிர, நாங்களாக நீக்கப் போவதாகச் சொல்லவில்லை - அந்த சட்டத் திருத்தம் கொண்டு வந்து அதன்படி தான் நீக்குவோம் என்று தான் சொல்லி இருக்கிறோம் - அதில் தவறு ஏதுமில்லை.

தமிழ்நாட்டில் போக்சோ அதிகமாக இருக்கிறது - பெண்களுக்காக எதிரான கொடுமைகள் அதிகரிக்கிறது என்றெல்லாம் இன்றைக்கு சொல்லி இருக்கிறார்.

பெண்களின் தைரியம்!

நம்முடைய முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் எங்கெல்லாம் செல்கிறார்களோ அங்கெல்லாம் பெண்களை உற்சாகப்படுத்தி, ஊக்கப்படுத்தி குழந்தைகளுக்கு எல்லாம் தைரியங்களை வரவழைத்து, பெண்களுக்கு தைரியங்களை வரவழைத்து, எந்த குற்றம் உங்களுக்கு எதிராக இருந்தாலும், அந்த குற்றத்திற்கு எதிராக பரிகாரம் தேட காவல் நிலையங்களுக்குச் சென்று நாடுங்கள் அதுதான் உங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற வலியுறுத்தலை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது - உங்களுக்கு தவறு என்று இருந்தால் உடனடியாக சென்று புகார் கொடுங்கள் என்று சொல்லி இருக்கிறார் - கடந்த ஆட்சியில் புகார் கொடுத்தால் கேட்க நாதி இல்லை - ஆனால், இந்த ஆட்சியில் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, இன்று புகார்கள் அதிகரிக்கிறது என்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. மக்கள் தைரியமாக வெளியே வரும் சூழலை நாங்கள் உருவாக்கி இருக்கிறோம் - பெண்களும் குழந்தைகளும் தைரியமாக வந்து இன்றைக்கு புகார்கள் தருகிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய தைரியம் தான் இதற்கு அடிப்படை காரணம்.

அதேபோல போதைப்பொருள் நடமாட்டம் பற்றி சொன்னீர்கள் - போதைப்பொருள் தமிழ்நாட்டில் உற்பத்தியே கிடையாது - எங்கிருந்து வருகிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும் - எந்த மாநிலங்களில் இருந்து அதை அனுமதிக்கிறார்கள்? எவ்வளவு கோடி லாபம் சம்பாதித்துக் கொண்டு அனுமதிக்கிறார்கள் என்பது தெரியும் - ஏன் நிகழ அனுமதிக்கிறீர்கள்? ஒன்றிய அரசு எப்படி போதைப் பொருளை வரவிடுகிறது அதை முதலில் நீங்கள் கேளுங்கள் - ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த வரை நாங்கள் எல்லா எல்லைகளிலும் காவல் பாதுகாப்பு அமைத்து அவர்களை கட்டுப்படுத்துவதன் மூலம் தான் எல்லையில் அதிகமாக நாங்கள் கைப்பற்றி இருக்கிறோம்.

போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள்!

இன்னும் சொல்லப்போனால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மூன்று மாதத்திற்கு ஒரு முறை போதைப்பொருள் தடுப்பதற்காக அனைத்து அதிகாரிகளையும் அழைத்து ஆய்வு கூட்டம் நடத்துகிறார் - எத்தனை இடங்களில் பறிமுதல் செய்து இருக்கிறீர்கள் - எத்தனை வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன? என்று இந்த கூட்டம் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இந்தியாவிலேயே நடக்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடு தான். ஆனால், தமிழ்நாட்டில் எந்த ஒரு போதைப்பொருள் உற்பத்தியும் கிடையாது -ஆனால் இதன் வழியாக வெளியே சென்று விடக்கூடாது. இங்கே எந்த போதைப் பொருள்களையும் மாணவர்களும், இளைஞர்களும் சீரழித்து விடக்கூடாது என்பதற்காக இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகள் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, கல்வியின் தரத்தைப் பற்றி ஆளுநர் சொல்லியிருக்கிறார் - கல்வி மிக சுமாராக இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார் - இந்தியாவில் இருக்கக்கூடிய 100 பல்கலைக்கழகங்களில், 18 தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் தமிழ்நாட்டில் தான் இருக்கின்றன - கல்வியில் தரம் தாழ்ந்திருந்தால், 18 பல்கலைக்கழகங்கள் 38 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் இருக்கும் நாட்டில், 18 தரம் உயர்ந்த பல்கலைக்கழகங்கள் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு - உயர்கல்வி படிக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகம் இருக்கக்கூடிய மாநிலம் தமிழ்நாடு - அப்போது எப்படி இங்கு கல்வியின் தரம் தாழ்ந்திருக்கும் - இங்கு அதிகமாக பெண்கள் வெளிநாடு, வெளி மாநிலங்களுக்கு வேலைக்கு செல்கின்ற மாநிலம், தமிழ்நாட்டில் வேலை செய்கின்ற மாநிலம், தமிழ்நாடு.

தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி - பல மடங்கு உயர்வு!

இன்னும் சொல்லப் போனால் யுபிஎஸ்சி யில் அதிகமானவர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என்பதற்காக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அதற்காக சிறப்பு பயிற்சி அளித்து அவர்களுக்கு ஊக்கத் தொகையும் கொடுத்து, அவர்களை எல்லாம் சிறந்தவர்களாக ஐஏஎஸ் ஐபிஎஸ் ஆக வருகிறார்கள் என்று சொன்னால், அதற்கு காரணம் தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி - தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி மற்ற மாநிலங்களிலிருந்து ஒப்பிடுகையில் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது கல்வி வளர்ச்சியில் தான் நம்முடைய தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து பஞ்சாயத்து தேர்தல் நடைபெறவில்லை என்பதுபற்றி சொல்லி இருக்கிறார்கள் - கடந்த ஆட்சியின் இறுதியில், 20 - 22 மாவட்டங்களுக்கு பஞ்சாயத்து தேர்தல் நடைபெற்றது - சென்ற வருடம் நடைபெற்று இருக்க வேண்டும் - ஆனால் பஞ்சாயத்தை தேர்தல் பகுதி பகுதியாக நடைபெறுவது எங்கேயுமே வழக்கம் கிடையாது - இப்போது எல்லாமே செப்டம்பர் மாதம் முடிவடையும் போது, ஆட்சிக்கு வந்தவுடன் அனைத்து பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகான தேர்தல்களை உடனடியாக நடத்திய அரசு - மீதமுள்ள ஏழு, எட்டு மாவட்டங்களுக்கு உள்ளாட்சித் தேர்தல்களை நடத்திய அரசு தலைவர் தளபதியினுடைய அரசு - நாங்கள் ஏன் பஞ்சாயத்து தேர்தல்களைக் கண்டு பயப்பட வேண்டும்? எல்லாவற்றையும் ஒன்றாக ஒரே நேரத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சி அமைப்புகள் இவற்றுக்கான தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம் - அதற்காகத் தான் தேர்தல் வருகின்ற செப்டம்பர் மாதமோ, அக்டோபர் மாதமோ - அதன் காலம் முடிவடைகின்ற போது அந்த தேர்தல் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கேள்வி : *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஆளுநர் உரையை சுட்டிக் காட்டி இதெல்லாம் நடைபெற்று இருக்கிறது - சட்டம் ஒழுங்கில் மிகவும் பின்தங்கி இருக்கிறார்கள் - கொலை, கொள்ளை நகரமாக இருக்கிறது - மாநிலத்தில் முதலீடுகளில் நான்காவது இடத்தில் வந்திருக்கிறது - MSME-ல் ஆறாவது இடத்தில் சென்றிருக்கிறோம் என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டியதை சொல்லியிருக்கிறார். அது பற்றி .....*

பதில்: MSME-ல் அன்றைக்கும் மூன்றாம் இடம் - இன்றைக்கும் மூன்றாம் இடம் - தமிழ்நாடு பின்தங்கி விட்டது என்பது தவறு. அவர்கள் ஆட்சியில் இரண்டாவது இடத்தில் இருந்து விட்டார்களா? அப்போது நாங்கள் மூன்றாவது இடத்தில் வந்து விட்டோமா - அப்போதுதான் அதை சொல்ல வேண்டுமே தவிர MSME-யை பொறுத்தவரை மூன்றாவது இடத்தில்தான் நாம் இந்தியாவிலே இருக்கிறோம் - அதை பொறுத்தவரை உத்தர பிரதேசம் போன்ற மாநிலம் தான் இருக்கிறார்கள் ஆனால் அங்கு எப்படி நடக்கிறது என்பதெல்லாம் நாங்கள் விமர்சிக்க விரும்பவில்லை - எனவே, எங்களை பொருத்தவரைக்கும் மூன்றாவது இடத்தில் இருக்கிறோமே தவிர பின்தங்கி விடவில்லை - ஆளுநர் சொல்வது போல ஒன்றுமே இல்லை, பூஜ்ஜியம் என்று அப்படியெல்லாம் இல்லை - இதில் நாங்கள் முன்னேறி தான் இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்கிறேன்.

அடுத்து கோவிலைப் பற்றி சொல்லி இருக்கிறார் - கோவிலுக்கு அறங்காவலர் எல்லாம் நியமிக்கப்படவில்லை - கோவில் எல்லாம் சும்மா இருக்கிறது என்று பேசி இருக்கிறார் - நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 31,163 ஆலயங்கள் இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வருகின்றன. அவற்றில், 17,873 கோவிலுக்கு எந்தவித மான விண்ணப்பங்களும் வரப் பெறவில்லை. அடுத்ததாக, 1,556 கோவில்களுக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன - எனவே, 3,290 கோவில்களுக்கு மட்டுமே EO-க்கள் இருக்கிறார்கள் மற்ற ஆலயங்களுக்கெல்லாம் ட்ரஸ்ட்டுகள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கேள்வி: *மாநிலத்தில் ஒரே ஆண்டில் 20000 பேர் தற்கொலைக்கு ஆளாகியிருக்கிறார்கள்? தற்கொலை மாநிலம் என்றும் சொல்லியிருக்கிறார். அது பற்றி....*

பதில்: பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. அரசாங்கம் அதற்கு பொறுப்பல்ல - ஆனால், அவர்கள் தேவையான உதவிகள் கேட்டிருந்தால், அரசாங்கம் நிச்சயமாக உதவிகள் செய்திருக்கும் - 20000 என்ற எண்ணிக்கை நாங்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

சூப்பர் முதலமைச்சர்!

கேள்வி: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்... சொல்லும்போது சூப்பர் முதல்வர் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார் என்று கூறுகிறார் அது குறித்து....*

பதில்: சூப்பர் முதல்வர் என்பது எல்லாவற்றிலும் வல்லவர் தான் சூப்பர் மேன் அதாவது எல்லாவற்றிலும் வல்லமை படைத்தவராக எங்களுடைய முதலமைச்சர் இருக்கிறார் - அவரை நாங்கள் சூப்பர் முதலமைச்சர் என்று சொல்வதில் தவறே கிடையாது - தமிழ்நாட்டை வளர்ச்சி பாதையில் இந்த ஐந்தாண்டு காலத்தில் கொண்டு வந்திருக்கிறோம் - தமிழ்நாடு இந்த ஐந்தாண்டு காலத்தில் முன்னேறி இருக்கிறது - இன்றைக்கு விவசாயத்தில், நெல் கொள்முதலில், பல லட்சம் டன் என்று முதலிடத்தில் வந்திருக்கிறோம். அதே போன்று தொழில் உற்பத்தியில், பல மடங்கு உற்பத்தியை வளர்த்திருக்கிறோம். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்திருக்கின்றோம். 11.19 சதவீதம் வளர்ச்சியை ஈட்டியிருக்கிறோம் - மேலும் பல்வேறு திட்டங்களாக மகளிர் உரிமைத்தொகையை இன்றைக்கு முழுமையாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் - டெல்லி தேர்தலில் அறிவித்துவிட்டு இது அப்போது குறைத்துக் கொண்டே வந்துவிட்டார்கள் - மற்ற மாநிலங்கள் எல்லாம் தயங்குகிறார்கள் ஆனால் முழுமையாக கொடுத்துவிட்டு உயர்த்திக் கொண்டிருக்கின்ற மாநிலம் ஒரு கோடியே 15 இலட்சத்திலிருந்து ஒரு கோடியே 30 இலட்சம் பேருக்கு உயர்த்திக் கொடுக்கும் மாநிலம் தமிழ்நாடு தான்.

அதேபோல் மகளிருக்கான கட்டணம் இல்லாத விடியல் பேருந்து தந்ததும் தமிழ்நாடு தான் - பெண்கள் உயர் கல்வி படிப்பதற்காக புதுமைப்பெண் திட்டம் - மாணவர்களுக்காக தமிழ்ப் புதல்வன் திட்டம் - அகில உலகமே பாராட்டும் ‘காலை உணவுத் திட்டம்’ - இது போன்ற மக்களின் வளர்ச்சிக்காக யோசித்து யோசித்து தந்திருக்கின்றார். அதோடு அல்லாமல், வயதானவர்களுக்கு வீடு தேடிச் சென்று ரேஷன் பொருட்களை தரும் தாயுமானவர் திட்டம் - இப்படி எல்லாத் திட்டங்களையும் தந்திருக்கும் முதலமைச்சர் அவர்களை சூப்பர் முதலமைச்சர் என்று அழைக்காமல் எப்படி அழைப்பது?

கேள்வி: *தேசிய கீதம் மீண்டும் அவமதிக்கப்பட்டு இருக்கிறது என்பது ஆளுநரின் அறிக்கை...*

பதில் : முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து - இறுதியில் தேசிய கீதம் - அதுதான் தமிழ்நாட்டின் வழக்கம் ‘நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சியின் வழக்கம். அந்த மரபுப் படிதான் நாங்கள் நடந்து கொண்டிருக்கிறோம். மரபை மீறவில்லை’ மரபை மீறினால்தான் தவறு நாங்கள் மரபுப்படி நடந்து கொண்டிருக்கிறோம்.

கேள்வி: *குடியரசு தினத்தன்று ஆளுநரின் தேநீர் விருந்தில் தமிழ்நாடு அரசு கலந்து கொள்ளுமா?*

பதில்: அது பற்றி முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதலமைச்சர், கழக தலைவர் அன்புத் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க திராவிட பொங்கல் மற்றும் விளையாட்டு நாங்குநேரி தொகுதி பாளையங்கோட்டை மத்திய ஒன்றியம் கிருஷ்ணாபுரத்தில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பா ளர் ம.கிரகாம்பெல் ஏற்பாட்டில் தமிழர் திருநாளை முன்னிட்டு 100 க்கும் மேற்பட்ட பானைகளில் திராவிட பொங்கலிடும் நிகழ்வு,விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. இந்நிகழ்வில் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம. கிரகாம்பெல் பங்கேற்று மாட்டு வண்டியில் வந்து திராவிட பொங்கலை துவக்கி வைத்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள் சித்திக், போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன்,சுபாஷ் தங்க பாண்டியன், செல்வ கருணாநிதி, பரமசிவ அய்யப்பன் சாந்தி சுபாஷ், பாளைஒன்றிய குழு தலைவர் முரளி தரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் சீனிவாசன்,அனுராதா உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.

திருவள்ளுவர் திணத்தை முன்னிட்டு, நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கம் எதிரில், தமிழ்ச் சங்கம் வளாகத்தில் அமையப்பெற்றுள்ள திருவள்ளுவர் சிலைக்கு நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர்,பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் வளனரசு, செய்யது முஹைதீன், துபாய் சாகுல் ஹமீது,சாமுவேல், பிரான்சிஸ்,பேபி கோபால்,அருள் இளங்கோ, சதீஷ் குமார், ஜெகஜீவன் ராம், முகமது கமாலுதீன், வல்லநாடு முத்து, சுபுஹானி, காசிம், முபீன் இஸ்மாயில், குறிச்சி ஆனந்த், பாலகிருஷ்ணன்,தொமுச. மகாவிஷ்ணு, பாலசுப்பிரமணியன், பலராமன், கண்ணன், இமானுவேல், கந்தன், அனிதா, தேவிகா, ரேவதி அசோக்,பூங்கனி, சௌந்தரம் முத்துராஜ், சித்ரா பௌர்ணமி உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.